## "தமிழ் பாடசாலைகளில் கற்கும் முஸ்லிம் மாணவர்கள் மீதான கலாசார தாக்கம்- வவுனியா தெற்கு வலயத்தை மையப்படுத்திய ஆய்வு"

**Supervisor**
*Dr. MIM. Jazeel (Senior Lecturer) &*
*Mr. K. Muhammad Rifthy*
*Lecturer (Prob.),*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

**Researcher**
*Ms. A. Aseena,*
*Department of Islamic Studies,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

### ஆய்வுச் சுருக்கம்

இவ்வாய்வானது "தமிழ் பாடசாலைகளில் கற்கும் முஸ்லிம் மாணவர்கள் மீதான கலாசார தாக்கம்" என்ற தலைப்பில் ஒரு கள ஆய்வாக விளங்குகின்றது. வவுனியா மாவட்ட கல்வி வலயத்தில் அமையப் பெற்றுள்ள வவுனியா தெற்கு வலயமானது அதிகமாக தமிழ் முஸ்லிம் கலவன் பாடசாலைகளாக காணப்படுகின்றது.

இவ்வலயத்தில் மொத்தமாக 109 பாடசாலைகள் உள்ளன. இங்கு 25 சிங்களப்பாடசாலைகளும், 74 தமிழ் பாடசாலைகளும் 10 முஸ்லிம் பாடசாலைகளும் 6 தமிழ் முஸ்லிம் கலவன் பாடசாலைகளும் உள்ளடங்கியுள்ளது. இதில் கல்வி கற்கும் மாணவர்களை ஆய்வுக்குட்படுத்தி இங்கு கல்வி கற்பதால் ஏற்படுகின்ற கலாசாரத்தாக்கங்களை அடையாளப்படுத்தும் வகையில் இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது.

வவுனியா மாவட்டமானது தமிழர்களைப் பெரும்பான்மையாகவும் முஸ்லிம்கள் மற்றும் சிங்களவர்கள் சிறுபான்மையாகவும் கொண்டமைந்துள்ளது. பெரும்பான்மை சமூகத்துக்கு மத்தியில் வாழும் போது பெரும்பான்மை சமூகத்தின் கலாசார நடவடிக்கைகள் சிறுபான்மையினரின் வாழ்கையில் செல்வாக்கு செலுத்துவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். கல்வி சமூகத்தைவழி நடாத்தும் சாதனமாகும். அது முறையாக இயங்குகின்ற போதே அது உயிரோட்டமுடையதாக மாறும். ஒரு சமூகம் எவ்வகையான கல்வியைப் பெறுகிறதோ அவ்வகைக் கல்வியின் பிரதிபலிப்பையே அச்சமூகம் வெளிப்படுத்தும்.

அந்த வகையில் தமிழ் பாடசாலைகளில் கற்கும் முஸ்லிம் மாணவர்களின் தனித்துவமான அடையாளச் சின்னமாக விளங்கும் கலாசாரப் பண்பாட்டு அம்சங்களில் அந்நிய கலாசாரமாதது ஊடுருவிக் காணப்படுகின்றதா? என்பதை ஆய்வுப் பிரச்சனையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு வலயத்தில் காணப்படும் தமிழ் கலவன் பாடசாலைகளின் பூர்வீகத்தை அறிந்து கொள்வதோடு, இங்கு கல்வி கற்கும் முஸ்லிம் மாணவர்கள் எவ்வாறான கலாசாரத் தாக்கங்களை எதிர்நோக்குகின்றனர்? தமிழ் கலாசாரமானது முஸ்லிம்கள் மத்தியில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகிறது? இது சமூகத்தில் எவ்வாறான விளைவை ஏற்படுத்துகின்றது? என்பதை இனங்கண்டு கொள்வதோடு இதிலிருந்து முஸ்லிம் சமூகத்தை எவ்வாறு விழிப்படையச் செய்வது என்பது பற்றிய ஆலோசனைகளையும் முன்மொழிவுகளையும் முன்வைக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாய்வானது அளவு மற்றும் பண்புசார் முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வில் முதலாம் நிலைத்தரவுகளாக: இப்பிரதேசத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் போன்றவர்களிடம் தயாரிக்கப்பட்ட வினாக்கொத்து பயன்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகளாக வலயக்கல்விப் பணிமனை அறிக்கைகள், பாடசாலைப் பதிவுத் திரட்டுப் புத்தகங்கள், இவ்வாய்வு தொடர்பாக எழுதப்பட்டுள்ள நூல்கள், சஞ்சிகைகள் ஆய்வுக் கட்டுரைகள், இணையத்தளங்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாய்வில் முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் தமிழ் கலாசாரமானது தாக்கம் செலுத்தியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

**Keywords:** தமிழ் கலாசாரம், முஸ்லிம் கலாசாரம், தமிழ் - முஸ்லிம் கலாசாரம், கலாசாரத் தாக்கங்கள், கல்வி, வவுனியா தெற்கு வலயம் என்பனவாகும்.